கவனிக்க.– 13.12.2024 ஆந் திகதிய 2415 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை

கவனிக்க.– இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2024 ஆம் ஆண்டுக்கான திருகோணமலை மாவட்டத்தின் நீதாசன வலயங்ககளின் யூரிமார் பெயர்ப் பட்டியல் ஒன்று சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2416 - 2024 දෙසැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2024.12.20**

2416 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - : காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| காணி மறுசீமைப்பு ஆணைக்குழுவின் அறிவித்தல்கள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்கார்ர திட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | |
| நிர்ணய உத்தயோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் அறிவித்தல்கள் | - |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2025, சனவரி மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2024, திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2024, ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

545- B 82637 - 5,403 (2024/12)

## நானாவித காணி அறிவித்தல்கள்

**காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்**

காணி ஆணையாளர் நாயகத்தின் இலக்கம்.: 4/10/ 67570.
மாகாண காணி ஆணையாளரின் இலக்கம்.: NP/28/04/2/ SLO/41/1761.

**21 (2) ஆம் இலக்க அரசாங்க காணிகள் ஒழுங்குவிதிகளின் கீழான அறிவித்தல்**

யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மராட்சி பிரதேச செயலகப் பிரிவின் தனங்கிளப்பு (J/299) கிராம அலுவலர் பிரிவின் தனங்கிளப்பு கிராமத்தின் Ya/ CHV/2017/149 ஆம் இலக்க சுவட்டு வரைபடத்தின் துண்டு இலக்கம் B ஊடாக காண்பிக்கப்பட்டுள்ள 1.4726 ஹெக்டேயர் பரப்பளவு கொண்ட அரசாங்க காணித் துண்டை வர்த்தக நோக்கத்தற்காக இலங்கை மின்சார சபையினால் குத்தகைக்கு கோரப்பட் டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

02. கோரியுள்ள காணியின் எல்லைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

வடக்கு : அரசாங்கக் காணி;
கிழக்கு : அரசாங்கக் காணி;
தெற்கு : அரசாங்கக் காணி;
மேற்கு : அரசாங்கக் காணி.

03. கோரப்பட்டுள்ள காணியை தேவைப்படுகின்ற காரணத்திற்காக குத்தகைக்கு வழங்குவதற்கு முடியும். எனவே அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நிபந்தனைகளின் கீழ் காணியை குத்தகைக்கு வழங்குவதற்கு அரசாங்கத்தினால் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

(அ) **குத்தகைக் காலம் .-** முப்பது (30) வருடங்கள் (2023.08.29 முதல் 2053.08.28 வரை)

(ஆ) **வருடாந்த குத்தகைத் தொகை.-** 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) குறைவாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 2% ஆகும். 2023 ஆம் ஆண்டில் காணியின் மதிப்பீட்டுப் பெறுமதியானது ஐந்து மில்லியன் ரூபாவிலும் (ரூபா 5,000,000.00) அதிகமாக இருக்கும் சந்தர்ப்பங்களில் தலைமை மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் அடிப்படையில் அந்த ஆண்டில் காணிக்கான சந்தைப் பெறுமதியின் 4% ஆகும். இந்த குத்தகைத் தொகை சகல 05 வருடங்களுக்கொருமுறை திருத்தப்பட வேண்டுமென்பதோடு அது முன்னைய 05 வருடங்களின் இறுதியில் அறவிடப்பட்ட வருடாந்த குத்தகை தொகைக்கு 20% சேர்க்கப்படல் வேண்டும்.

**தவணைத் தொகை .-** தவணைத் தொகையொன்று அறவிடப்பட மாட்டாது.

(இ) இந்தக் காணியை வர்த்தக வடவடிக்கைகள் தவிர வேறு நடவடிக்கைகளுக்கும் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது;

(ஈ) இந்தக் குத்தகை ஆரம்பிக்கும் திகதி முதல் ஒரு வருட காலத்திற்குள் மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர் திருப்தி யடையும் வகையில் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(உ) மாகாண காணி ஆணையாளர்/ பிரதேச செயலாளர், ஏனைய நிறுவனங்களால் விதிக்கப் பட்டுள்ள ஏனைய விசேட நிபந்தனைகளுக்கும் இந்த குத்தகை உட்படுதல் வேண்டும்;

(ஊ) நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிங்களை சிறப்பான அபிவிருத்தி நிலமையுடன் பேணிவரல் வேண்டும்;

(எ) காணியை குத்தகைக்கு விடப்பட்டிருக்கையில் குத்தகைதாரர் காணியைப் பெற்றுக்கொண்ட விடயத்தை உரிய காலப் பகுதியினுள் நிறை வேற்றிக்கொள்வதற்கு தவறும் பட்சத்தில் குத்தகையை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்படும்;

(ஏ) 2023.08.29 ஆந் திகதியிலிருந்து 05 வருடங்கள் கழியும் வரை இந்தக் காணியை குத்தகைக்குப் பெற்ற விடயத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக உப குத்தகை வழங்கல் அல்லது உரிமை மாற்றல் தவிர ஏனைய உப குத்தகை வழங்கல் அல்லது உரிமை மாற்றலுக்கு அனுமதி வழங்கப்பட மாட்டாது;

(ஐ) குத்தகைக்கான வாடகையை தொடர்ச்சியாக செலுத்த வேண்டுமென்பதோடு, குத்தகையைச் செலுத்துவதற்கு தவறும் பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகி விடும். குத்தகையைச் செலுத்துவதனை தொடர்ச்சியாக மேற்கொண்டிராத சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய நிலுவை குத்தகைத் தொகைக்கு 10% தண்ட வரி அறவிடப்படும்;

வர்த்தமானியில் அறிவித்தல் வெளியிடப்பட்ட திகதி முதல் 06 வார காலத்திற்குள் குறித்த காணியைக் குத்தகைக்கு வழங்கக் கூடாதென ஏற்றுக்கொள்ளக் கூடிய காரணங்களை எழுத்து மூலமாக எனக்கு அறிவிக்காவிட்டால் கோரிக்கைக்கிணங்க குத்தகைக்கு வழங்கப்படும்.

கே. ஜி. பீ.சௌம்யா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகம் சார்பாக.

காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/ 6,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
2024, திசெம்பர் 06.

12 - 313

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக் கப்பெற்றது.